பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
17 08 2024 **SATURDAY** 7 15 **AM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- நாட்டில் மூன்று புதிய மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
- பிஜேபி தேசிய நிர்வாகிகள் கூட்டம், புதுதில்லியில் இன்று நடைபெறவுள்ளது.
- தமிழகத்தில் அத்திக்கடவு - அவினாசி திட்டத்தை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று காணொலி வாயிலாக தொடங்கி வைக்கிறார்.
- தெற்காசிய உச்சிமாநாடு காணொலி வாயிலாக இன்று நடைபெறவுள்ளது.
- காஸா போர் நிறுத்தம் தொடர்பாக கத்தார் தலைநகர் தோஹாவில் நடைபெற்ற பேச்சுக்கள் எந்தவித முடிவும் எட்டப்படாமல் நிறைவடைந்தது.

>>>><<<<

நாட்டில் மூன்று புதிய மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

புதுதில்லியில் நேற்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் இதனை தெரிவித்தார்.

பெங்களுருவில் 15 ஆயிரத்து 611 கோடி ரூபாய் மதிப்பில் மூன்றாவது கட்ட மெட்ரோ ரயில் திட்டத்திற்கும், தானே-யில் 12 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான ஒருங்கிணைந்த மெட்ரோ ரயில் திட்டத்திற்கும், புனேயில் முதலாவது மெட்ரோ ரயில் திட்டத்தின் விரிவாக்கத்திற்கும் அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளதாக அவர் கூறினார்.

பத்தாண்டுகளுக்கு முன்பு, ஐந்து நகரங்களில் மட்டுமே மெட்ரோ ரயில்கள் இயக்கப்பட்டு வந்ததாகவும், தற்போது 21 நகரங்களில் இயக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

சர்வதேச அளவில் மெட்ரோ ரயில் திட்டப் பாதை அதிகமாக உள்ள நாடுகளில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது என்றும் அவர் கூறினார்.

பெங்களூரு மூன்றாவது கட்ட மெட்ரோ ரயில் சேவை 2029ஆம் ஆண்டு மக்கள் பயன்பாட்டுக்கு வரும் என்றும், இத்திட்டத்தின் கீழ், 44 புள்ளி ஆறு ஐந்து கிலோமீட்டர் தூரத்திற்கு பெங்களூரு நகரின் மேற்குப் பகுதியில் ரயில் பாதைகள் அமைக்கப்படும் என்றும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

தானே ஒருங்கிணைந்த மெட்ரோ ரயில் திட்டம், 2029ஆம் ஆண்டு செயல்பாட்டுக்கு வரும் என்றும், இத்திட்டத்தின் கீழ் தானே நகரின் மேற்குப் பகுதியில் 22 ரயில் நிலையங்களுடன், 29 கிலோமீட்டர் நீளத்திற்கு பாதைகள் அமைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

புனேயில் முதல்கட்ட மெட்ரோ ரயில் திட்ட விரிவாக்கத்தின் கீழ், **Swargate** முதல் **Katraj** வரை பாதைகள் அமைக்கப்படும் என்றும், இதனால் நகரின் போக்குவரத்து நெரிசல் குறையும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாட்னா அருகே **Bihta** என்னுமிடத்தில் புதிய ஒருங்கிணைந்த விமான முனைய கட்டிடம் அமைக்கப்படும் என்றும், ஆண்டொன்றுக்கு 50 லட்சம் பயணிகளை கையாளும் வகையில் கட்டப்படும் என்றும் அவர் கூறினார்.

ஆண்டுக்கு ஒரு கோடி பயணிகளை கையாளும் வகையில் எதிர்காலத்தில் இந்த முனையக் கட்டிடம் விரிவுபடுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மத்தியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் புதிய அரசு அமைந்த பின்னர், இதுவரை 1 லட்சத்து 54 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான கட்டமைப்பு திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாகவும், நேற்றைய ஒப்புதலையும் சேர்த்து ஒட்டுமொத்தமாக 2 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளதாகவும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

**>>>><<<<**

பிஜேபி தேசிய நிர்வாகிகள் கூட்டம், புதுதில்லியில் இன்று நடைபெறவுள்ளது.

கட்சியின் தலைவர் திரு. ஜெ.பி. நட்டா தலைமையில் அக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் உறுப்பினர் சேர்க்கை மற்றும் அமைப்பு தேர்தல்கள் குறித்து விவாதிக்கப்படவுள்ளது.

ஜம்மு காஷ்மீர், ஹரியானா, மஹாராஷ்ட்ரா, ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவை தேர்தலுக்கு கட்சியை தயார்படுத்துவது குறித்தும் இந்த கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பிஜேபி மாநிலத் தலைவர்கள், பொதுச்செயலாளர்கள், கட்சியின் பல்வேறு அமைப்புகளின் பொறுப்பாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

மக்களவைத் தேர்தல் முடிந்த பிறகு, பிஜேபி நடத்தும் மிகப்பெரிய கூட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

>>>><<<<

மத்திய அரசின் முக்கிய துறைகளில் உள்ள செயலர்கள் மாற்றப்பட்டுள்ளனர்.

அமைச்சரவை நியமனக் குழு, பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் துறைகளின் உயரதிகாரிகளை மாற்றியமைத்துள்ளது.

நிதி சேவைகள் துறையின் செயலராக உள்ள மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. விவேக் ஜோஷி, மத்திய பணியாளர் நலன் மற்றும் பயிற்சித்துறை செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நிலக்கரி துறையின் கூடுதல் செயலராக தற்போதுள்ள திரு. நாகராஜூ மட்டிலாலா, நிதி சேவைகள் துறை செயலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

கம்பெனி விவகாரங்கள் துறையின் செயலராக உள்ள திரு. மனோஜ் கோவில், செலவுத்துறை செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திருமதி. தீப்தி கவுர் புதிய கம்பெனி விவகாரங்கள் துறை செயலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தொழில் ஊக்குவிப்பு மற்றும் உள்நாட்டு வர்த்தக துறையின் செயலராக உள்ள திரு. ராஜேஷ்குமார் சிங், பாதுகாப்புத் துறையின் சிறப்பு பணி அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது பாதுகாப்புத் துறையின் செயலராக உள்ள திரு. அரமானே கிரிதர், இந்த ஆண்டு அக்டோபர் மாதம் ஓய்வு பெற்ற பின்னர் அந்த பொறுப்பை திரு. ராஜஷ்குமார் சிங் ஏற்றுக்கொள்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

கொல்கத்தாவில் பயிற்சி மருத்துவர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வழக்கில் நீதி கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என்று பிஜேபி மூத்த தலைவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான திருமதி. ஸ்மிருதி இரானி தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த சம்பவத்திற்கு நீதி கேட்டு, மேற்குவங்க மாநிலத்தில் மருத்துவர்கள், மருத்துவ மாணவர்கள் மட்டுமல்லாமல், சாமானிய மக்க மக்களும் போராடி வருவதாக கூறினார்.

முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு நாடு முழுவதும் இந்த போராட்டத்திற்கு ஆதரவு கிடைத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொல்லப்பட்ட பயிற்சி மருத்துவ மாணவியின் உடலில் உள்ள காயங்களை பார்க்கும் போது, இந்த குற்றத்தில் பலர் ஈடுபட்டிருக்கலாம் என்றும் திருமதி. ஸ்மிருதி இரானி சந்தேகம் தெரிவித்தார்.

>>>><<<<

அத்திக்கடவு - அவினாசி திட்டத்தை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று காணொலி வாயிலாக தொடங்கி வைக்கிறார்.

திருப்பூர், ஈரோடு மற்றும் கோவை மாவட்ட விவசாயிகளின் கனவுத் திட்டமான இது, 2019ஆம் ஆண்டு அஇஅதிமுக ஆட்சிக்காலத்தில் அப்போதைய முதலமைச்சர் திரு. எடப்பாடி பழனிசாமியால் அடிக்கல் நாட்டப்பட்டது.

இத்திட்டம் சுமார் 2 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பவானி ஆற்றில் காளிங்கராயன் அணைக்கட்டின் கீழ்ப்புறத்திலிருந்து ஆண்டொன்றுக்கு ஒன்று புள்ளி ஐந்து பூஜ்யம் டிஎம்சி உபரிநீர் வினாடிக்கு 250 கனஅடி வீதம் 70 நாட்களுக்கு ஆறு நீரேற்றங்கள் வழியாக குழாய்கள் மூலம் ஆயிரத்து 65 கிலோமீட்ட நீளத்திற்கு கொண்டு செல்லப்படவுள்ளது.

இதனால் உபரிநீர் வீணாகாமல் தடுக்கப்படுவதோடு, ஈரோடு, கோவை, திருப்பூர் மாவட்டங்களில் உள்ள 32 நீர்வளத்துறை ஏரிகள், 42 ஊராட்சி ஒன்றிய ஏரிகள், 971 குளம், குட்டைகள் என மொத்தம் ஆயிரத்து 45 நீர்நிலைகள் நிரப்பப்படும்.

இதனால் மொத்தம் 24 ஆயிரத்து 468 ஏக்கர் நிலம் பயனடையும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

>>>><<<<

“நீடித்த எதிர்காலத்திற்கு அதிகாரம் பெற்ற தெற்காசிய நாடுகள்” என்ற கருப்பொருளுடன் மூன்றாவது உலக தெற்காசிய உச்சிமாநாடு காணொலி வாயிலாக இன்று நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டிற்கு இலங்கை, நேபாளம், பூட்டான், பங்களாதேஷ், மாலத்தீவு, பாகிஸ்தான் உள்ளிட்ட அனைத்து தெற்காசிய நாடுகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

உலக அளவில் தொடர்ந்து ஏற்பட்டுவரும் சவால்கள், உணவு மற்றும் எரிசக்தி பாதுகாப்பு சிக்கல்கள், பருவநிலை மாற்றம் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளது.

>>>><<<<

தமிழகத்தில் கடந்த ஆண்டைக்காட்டிலும் இந்த ஆண்டு சுற்றுலா தலங்களுக்கு கூடுதலாக 14 லட்சம் சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளதாக மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ராமச்சந்திரன் கூறியுள்ளார்.

ராணிப்பேட்டையில் இயங்கி வரும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு சொந்தமான தமிழ்நாடு ஹோட்டலில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை நேற்று ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த காலங்களில் நஷ்டத்தில் இயங்கி வந்த சுற்றுலாத்துறையின் ஹோட்டல்கள் தற்போது மேம்படுத்தப்பட்டு, லாபத்தில் இயங்கி வருவதாக தெரிவித்தார்.

தமிழகத்தில் சுற்றுலாத்துறையில் 100 கோடி ரூபாய் மதிப்பில் பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருவதாகவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சுற்றுலாத் தலங்கள் பல்வேறு வசதிகளுடன் மேம்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

>>>><<<<

கத்தார் தலைநகர் தோஹாவில் நேற்று நடைபெற்ற காஸா போர் நிறுத்தம் தொடர்பான பேச்சுக்கள் எந்தவித முன்னேற்றமும் இல்லாமல் முடிவடைந்தது.

இந்தக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட யோசனைகள் தொடர்பாக எந்தவொரு முடிவுக்கும் வரமுடியவில்லை என்று அமெரிக்கா, கத்தார், எகிப்து ஆகிய நாடுகள் கூட்டறிக்கையில் தெரிவித்துள்ளன.

போர் நிறுத்தம் தொடர்பாக இந்நாடுகள் தீவிரமாக விவாதித்ததாகவும், பேச்சுக்கள் ஆக்கபூர்வமாக அமைந்ததாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பேச்சுவார்த்தையில் விரைவில் முடிவை எட்டும் வகையில் அடுத்த வாரம் கெய்ரோவில் இந்த மூன்று நாடுகளின் பிரதிநிதிகள் சந்தித்து பேசுவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த மூன்று நாடுகளும் ஹமாஸ் மற்றும் இஸ்ரேல் இடையே உடன்படிக்கையை ஏற்படுத்த முயற்சித்து வருகின்றன.

>>>><<<<

அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிடும் துணை அதிபர் திருமதி. கமலா ஹாரிஸ், தாம் வெற்றி பெற்றால், மேற்கொள்ளவுள்ள பொருளாதார திட்டங்கள் தொடர்பாக சில யோசனைகளை தெரிவித்துள்ளார்.

வடக்கு கரோலினாவில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய அவர், தற்போதுள்ள வரிகள் குறைக்கப்படும் என்றும், வீட்டு வசதி திட்டங்கள் அதிகரிக்கப்படும் என்றும் கூறினார்.

அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், தாம் அதிபராக பொறுப்பேற்றால் முதல் 100 நாட்களுக்குள் முன்னுரிமை அடிப்படையில் இவை செய்து முடிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பணவீக்கத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள அமெரிக்க மக்களை பாதுகாக்கும் வகையில் இந்த திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும்., உணவு, வீட்டு வசதி, குழந்தை பராமரிப்பு ஆகியவற்றிலிருந்து பொதுமக்களுக்கு உடனடியாக நிவாரணம் கிடைக்கும் என்றும் திருமதி. கமலா ஹாரிஸ் கூறியுள்ளார்.

>>>><<<<